# இளவயதுத் திருமணத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள்



## தாய்க்கு....

- இளவயதில் கர்ப்பம் தரித்தல். இதனால்

1) கர்ப்பப்பை போதிய வளர்ச்சியுறாததால் கருச்சிதைவு ஏற்படல்.

2) அதிகரித்த அளவில் கர்ப்பகால குருதிச்சோகை, கர்ப்பகால குருதி அமுக்கம், கர்ப்பகால நீரிழிவு நோய் ஏற்படல்.

3) பிறப்புக்கால்வாய், இடுப்பென்பு போதிய வளர்ச்சி அடையாதிருப்பதனால் சத்திரசிகிச்சை பிரசவமும் அதனால் ஏற்படும் மேலதிக பிரச்சினைகளும்.

- உயர் கல்வி மற்றும் சமூக முன்னேற்றத்தில் தடை ஏற்படும்.
- இளம் வயதில் உடலுறவு கொள்ளுதல், கர்ப்பப்பையின் கழுத்தில் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பை அதிகரிக்கும்.
- வீட்டில் தனித்திருப்பதனால், மனச்சோர்வு, மன அழுத்தம் போன்ற மனநோய்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

## தந்தைக்கு....



- நியாயத்தைத் தவிர்த்து உணர்வுகளின் உந்துதலால் செயல்படுதல்.
  உ+ம் : கோபம், குடும்ப வன்முறை
- அதிக பொறுப்புக்களை தாங்கமுடியாமை.
- முரண்பாடுகளை எதிர்கொள்ளல்.
- வாழ்க்கையில் விரக்தி.
- மதுபோதைக்கு அடிமையாதல்.

## சிசு / குழந்தைக்கு.....



- பிறப்பு நிறை குறைவு
- சிசுமரணம்
- தாயின் போசனை குறைவால் (போலிக்கமில மாத்தி ரைகள் உட்கொள்ளாமை) மூளைவிருத்தி அற்ற குழந்தைகள் பிறக்கும் வாய்ப்பு அதிகம்.
- குழந்தைகயின் பிறப்பை பதியமுடியாமை.
- தாய் மன உளைச்சலுக்கு ஆளாகுவதால் குழந்தை பராமரிப்பு குறையும்.

## குடும்பத்திற்கு.....

i) உறவினர்களால் வெறுக்கப்பட்டு தனிமைப் படுத்தப்படல்.

ii) சமூக அவமானத்திற்கு ஆளாகுதல்.

iii கல்விநிலை குறைவாக உள்ளதால், வேலை வாய்ப்புக்களை பெறுவதில் சிரமம்.

iv) அதிக எண்ணிக்கையான குழந்தைகளை சொற்ப காலத்தில் பெற்றெடுக்கும் வாய்ப்பு அதிகம்.

v) பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்குதல்.

vi) குடும்பத்தில் குழப்பம் ஏற்படுதல்.

vii)திருமண முறிவு.

viii) தற்கொலை.

## இளவயதை மகிழ்ச்சியாக செலவிட???



இளவயதில் ஏற்படும் மாற்றங்கள் இயற்கையானவையும் எம்மை நிறைவு படுத்துபவையும் ஆகும். இவற்றை அடையாளம் கண்டு சரியான வழியில் செல்ல வேண்டும்.

நண்பர், நண்பிகளின் மேல் அக்கறை காட்டி நட்பை வளர்ப்போம்.

அனுபவங்களை பகிர்வோம்.

பெற்றோர், மூத்தோர் ஆசிரியர்களுக்கு உரிய மதிப்பளித்து, அவர்களது வழிகாட்டலில் நடப்போம்.

எம்முள் மறைந்துள்ள திறமையை அடையாளம் கண்டு விருத்தி செய்வோம். அத்திறமை விளையாட்டு, சங்கீதம், நாட்டியம், சித்திரம், பாட்டு அல்லது வேறொன்றாக இருக்கலாம்.

எதிர்காலத்தை சரியாகத் திட்டமிட்டு நடப்போம்.

இளவயதுத் திருமணத்தைத் தவிர்ப்போம்.

**தயாரிப்பு உதவி:**

அ.யூட் பிரசாந்தன்
4ம் வருட மருத்துவ மாணவன்

**அனுசரணை:**


world Vision

Child Protection
Jaffna.

ANDRA DIGITAL PRINTERS T.P: 021-4590268

# இள வயதுத் திருமணங்களைத் தவிர்ப்போம்

## சுகமான வாழ்க்கை வாழ்வோம்.....



வெளியீடு:
கல்விசார் பொருட்கள் தயாரிப்பு அலகு
சமுதாய மருத்துவத்துறை
மருத்துவ பீடம்
யாழ் பல்கலைக்கழகம்.

# இளமைப் பருவம்

வாழ்க்கையில் 10ல் இருந்து 19 வயது வரை யௌவனப் பருவம் ஆகும். இப்பருவத்தில் இளைஞர் யுவதிகளில் உடலைப்போல் உள்ளத்திலும் மாற்றங்கள் ஏற்படும்.

இது குழந்தையின் பரம்பரை, போசாக்கு, சூழல் போன்ற காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றது.

## திருமணம்?

ஓர் ஆணும் பெண்ணும் இவ்வுலகில் உயிர் வாழும்வரை ஒன்றாக சங்கமித்தல் திருமணம் ஆகும்.

## திருமணத்தின் நோக்கம் :

- அன்புறவும் தோழமையும்.
- குழந்தைப் பேறு.

## திருமணத்தின் பண்புகள் :

- ஒருவனுக்கு ஒருத்தி எனும் ஒருமைப் பண்பு .
- முறிவடையா உறவு.

## இளவயதுத் திருமணம் என்றால் என்ன?

18 வயதிற்கு முன்னான திருமணம் இளவயதுத் திருமணம் ஆகும்.

# இளவயதுத் திருமணத்துக்கான காரணங்கள்

- போதிய கல்வி அறிவின்மை

- இளவயதில் ஏற்படும் உடல், உள மாற்றங்களை புரிந்து நடக்கும் மனவிருத்தியும், சுய கட்டுப்பாடும் இல்லாமை.

- இளவயதுத் திருமணம் சில சமூக வழக்கமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் இருத்தல்.

- வீட்டில் இனிய, சந்தோசமான சூழல் இல்லாதி--ருப்பின், இதைத் தவிர்க்க திருமணம் உதவும் எனும் எண்ணம். ஆனால் திருமணம் இதற்கு ஒரு தீர்வல்ல.

- பெற்றோர் இளவயதில் திருமணம் செய்திருப்பின், அவர்கள் குழந்தைகள் இளவயதில் திருமணம் செய்வதற்கான வாய்ப்பு அதிகம். (22%)

- பெற்றோரின் வற்புறுத்தல்.

- போர்ச்சூழல்.